# மார்ச் - 27 - செவ்வாய்

பரிசுத்த வாரம்

## ஆண்டவரே! உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்: திபா. 71:1

### முதல் வாசகம் : ஏசாயா 49 : 1 – 6

தீவு நாட்டினரே, எனக்குச் செவிகொடுங்கள் தொலைவாழ் மக்களினங்களே, கவனியுங்கள் கருப்பையில் இருக்கும்போதே ஆண்டவர் என்னை அழைத்தார் என் தாய் வயிற்றில் உருவாகும் போதே என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார். என் வாயைக் கூரான வாள்போன்று ஆக்கினார் தம் கையின் நிழலால் என்னைப் பாதுகாத்தார் என்னைப் பளபளக்கும் அம்பு ஆக்கினார் தம் அம்பறாத் தூணியில் என்னை மறைத்துக் கொண்டார். அவர் என்னிடம், "நீயே என் ஊழியன், இஸ்ரயேலே! உன் வழியாய் நான் மாட்சியுறுவேன்" என்றார். நானோ, "வீணாக நான் உழைத்தேன் வெறுமையாகவும் பயனின்றியும் என் ஆற்றலைச் செலவழித்தேன் ஆயினும் எனக்குரிய நீதி ஆண்டவரிடம் உள்ளது என் பணிக்கான பரிசு என் கடவுளிடம் இருக்கின்றது" என்றேன். யாக்கோபைத் தம்மிடம் கொண்டு வரவும், சிதறுண்டு இஸ்ரயேலை ஒன்று திரட்டவும் கருப்பையிலிருந்தே ஆண்டவர் என்னைத் தம் ஊழியனாக உருவாக்கினார் ஆண்டவர் பார்வையில் நான் மதிப்புப்பெற்றவன் என் கடவுளே என் ஆற்றல் அவர் இப்பொழுது உரைக்கிறார் அவர் கூறுவது யாக்கோபின் குலங்களை நிலை நிறுத்துவதற்கும் இஸ்ரயேலில் காக்கப்பட்டோரைத் திருப்பிக் கொணர்வதற்கும் நீ என் ஊழியனாக இருப்பது எளிதன்றோ? உலகம் முழுவதும் மீட்பை அடைதற்கு நான் உன்னைப் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்துவேன்.

**பதில்பாடல் :** என் வாய் நாள்தோறும் உமது மீட்பை எடுத்துரைக்கும்

### நற்செய்தி : யோவான் 13: 21 – 33,36 – 38

அக்காலத்தில் தம் சீடர்களுடன் பந்தியமர்ந்த இயேசு உள்ளம் கலங்கியவராய், "உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்று திட்டவட்டமாகக் கூறினார். யாரைப் பற்றி அவர் இப்படிக் கூறினார் என்று தெரியாமல் சீடர்கள் குழப்பமுற்று ஒருவரை ஒருவர் நோக்கினார்கள். இயேசுவின் சீடருள் ஒருவர் அவர் அருகில் அவர் மார்புப் பக்கமாய்ச் சாய்ந்திருந்தார். அவர்மேல் இயேசு அன்புகொண்டிருந்தார். சீமோன் பேதுரு அவருக்குச் சைகை காட்டி, "யாரைப்பற்றிக் கூறுகிறார் எனக்கேள்" என்றார். இயேசுவின் அருகில் அவர் மார்புப் பக்கமாய்ச் சாய்ந்திருந்த அவர், "ஆண்டவரே அவன் யார்?" என்று கேட்டார். இயேசு மறுமொழியாக, "நான் யாருக்கு அப்பத் துண்டைத் தோய்த்துக் கொடுக்கிறேனோ அவன்தான்" எனச் சொல்லி, அப்பத் துண்டைத் தோய்த்துச் சீமோன் இஸ்காரியோத்தின் மகனாகிய யூதாசுக்குக் கொடுத்தார். அவன் அப்பத் துண்டைப் பெற்றதும் சாத்தான் அவனுக்குள் நுழைந்தான். இயேசு அவனிடம், "நீ செய்ய விருப்பதை விரைவில் செய்" என்றார். இயேசு ஏன் அவனிடம் இப்படிக் கூறினார் என்பதைப் பந்தியில் அமர்ந்திருந்தோர் யாரும் புரிந்து கொள்ளவில்லை. பணப்பை யூதாசிடம் இருந்ததால், திருவிழாவுக்குத் தேவையானதை வாங்கவோ ஏழைகளுக்கு ஏதாவது கொடுக்கவோ இயேசு அவனிடம் கூறியிருக்கலாம் என்று சிலர் நினைத்துக்கொண்டனர். யூதாசு அப்பத் துண்டைப் பெற்றுக் கொண்டவுடன் வெளியே போனான். அது இரவு நேரம். அவன் வெளியே போனபின் இயேசு, "இப்போது மானிடமகன் மாட்சி பெற்றுள்ளார். அவர் வழியாகக் கடவுளும் மாட்சிபெற்றுள்ளார். கடவுள் அவர் வழியாக மாட்சி பெற்றாரானால் கடவுளும் தம் வழியாய் அவரை மாட்சிப்படுத்துவார். பிள்ளைகளே, இன்னும் சிறிது காலமே உங்களோடு இருப்பேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள். ஆனால் நான் போகும் இடத்திற்கு உங்களால் வர இயலாது. இதையே யூதர்களுக்குச் சொன்னேன் இப்போது உங்களுக்கும் சொல்கிறேன். சீமோன் பேதுரு இயேசுவிடம், "ஆண்டவரே நீர் எங்கே போகிறீர்?" என்று கேட்டார். இயேசு மறுமொழியாக, "நான் போகுமிடத்திற்கு என்னைப் பின்தொடர்ந்து வர இப்போது உன்னால் இயலாது பின்னரே என்னைப் பின்தொடர்வாய்" என்றார். பேதுரு அவரிடம், "ஆண்டவரே ஏன் இப்போது நான் உம்மைப் பின்தொடர இயலாது? உமக்காக என் உயிரையும் கொடுப்பேன்" என்றார். இயேசு அவரைப் பார்த்து, "எனக்காக உயிரையும் கொடுப்பாயோ? நீ மும்முறை என்னை மறுதலிக்குமுன் சேவல் கூவாது என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்" என்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் தாயின் கருவறையில் உருவாகும் முன்பே எங்களைத் தெரிந்தெடுத்து எங்கள் மூலமாக தன்னைப்பற்றி அறியாதவர்கள் தன்னிடம் அழைத்து வர சித்தங் கொள்கின்றார். எனவேதான் உலகில் தலைசிறந்ததாகிய அன்பாகிய அன்பினை நாங்கள் கடைப்பிடித்து வாழ அன்று இராவுணவின் பொழுது சீடர்களின் பாதங்களைக் கழுவி முத்தமிட்டு தான் செய்தது போல் நீங்களும் செய்யுங்கள் என்று தன்னைத் தாழ்த்தியவராக செய்தும் காட்டினர். ஆனால் நாங்களோ அவ்வாறு அறிந்தும் தெரிந்தும் கூட எமது வாழ்வை மாற்றவுமில்லை மாற்ற முயல்வதுமில்லை. ஏனெனில் நாங்கள் வாழ்ந்தால் மட்டும் போதும் என்று சுயலநலம் தளைத்தோங்கியதே காரணம். அன்பு பொறுமையுள்ளது, பரிவுள்ளது, தன்னலத்தை நாடாது, இறுமாப்பு அடையாது, சீற்றத்திற்கு இடம் கொடாது.......இவ்வாறு வேதாகமத்தில் பார்க்கின்றோம். இவ்வன்பைத்தான் எங்கள் மத்தியில் எதிர்பார்க்கின்றார். எமது குடும்பத்தில், அயலவர்கள், உற்றார் உறவினர்கள் என்று வாழும் பொழுது அவரும் எங்களை அன்பு செய்வார். என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பர் என் தந்தையும் அவர்களை அன்பு செய்வார்'' (யோவா.15:22). எனவே நாங்கள் தன்னலம் கொண்டு வாழாமல் பிறர் நலம் கொண்டு வாழ்ந்து ஒற்றுமையுடனும் சந்தோஸத்துடனும் வாழ்வோம்.